# யாழ்ப்பாண விஞ்ஞானச் சங்கம்

## பாடசாலை மாணவர்களுக்கான விஞ்ஞானப் போட்டிகள் - 2023/2024

ஆண்டுதோறும் வடமாகாணப் பாடசாலை மாணவர்களுக்கு இடையில் யாழ்ப்பாண விஞ்ஞானச் சங்கம் பல்வேறு விஞ்ஞானம் சார்ந்த போட்டி நிகழ்ச்சிகளை நடாத்தி வருகின்றது. அதன் தொடர்ச்சியாக இவ்வருடமும் பின்வரும் 7 வேறுபட்ட எண்ணக்கருக்களுடன் போட்டிகளை நடாத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது:

1. கண்காட்சிப் போட்டி (Exhibit competition)
2. சுவரொட்டி போட்டி (Poster competition)
3. விஞ்ஞானக் கட்டுரைப் போட்டி (Essay Competition)
4. பாடசாலைத் தோட்டப் போட்டி (School gardening competition)
5. வினாடி வினாப் போட்டி (Quiz competition)
6. புனைகதைப் போட்டி (Fiction story competition)
7. பேச்சுப் போட்டி (Oration competition)

இப்போட்டிகளுக்காக பாடசாலை மாணவர்கள் கீழ்வரும் மூன்று பிரிவுகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளனர்:

பிரிவு I – தரம் 6-8
பிரிவு II – தரம் 9-11
பிரிவு III – தரம் 12-13

ஒவ்வொரு போட்டிகளுக்கான பரிசில்களும் சான்றிதழ்களும் யாழ்ப்பாண விஞ்ஞானச் சங்கத்தின் வருடாந்த அமர்வின் இறுதி நாள் நிகழ்வில் வழங்கப்படுவதுடன் பங்குபற்றும் மாணவர்கள் அனைவருக்கும் e-certificate வழங்கப்படும்.

### விண்ணப்பங்கள் அனுப்பும் முறைகள்

I) இப்போட்டிகளில் பங்குபற்ற விரும்பும் பாடசாலைகள் தமது விபரங்களை கீழே தரப்பட்டுள்ள இணைப்பில் (Google form) பூரணப்படுத்தி அனுப்புதல் வேண்டும்.
https://docs.google.com/forms/d/120vu2qZWadGJtT7exfSuoXi89n6bcG5YByDIOxrVOm4/edit

அல்லது

II) உரிய விண்ணப்படிவங்களை நிரப்பி thejsaorg@gmail.com மின்னஞ்சல் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கலாம்.

அல்லது

III) உரிய விண்ணப்படிவங்களை நிரப்பி 0770725056 என்ற எண்ணுக்கு Viber மூலம் அனுப்பி வைக்கலாம்.

ஒரு பாடசாலையிலிருந்து அப்பாடசாலை மாணவர்கள் பங்குபற்றும் அனைத்துப் போட்டிகள் பற்றிய விபங்களையும் மாணவர்களின் விபரங்களையும் ஒரே விண்ணப்பப்பத்தில் பூரணப்படுத்தி அனுப்புதல் வேண்டும். அதாவது இணைப்பில் கிடைக்கும் விண்ணப்பத்தில் அனைத்து விபரங்களையும் பூரணப்படுத்தி அனுப்புதல் வேண்டும். ஒரு பாடசாலை ஒரு விண்ணப்பத்தை மாத்திரம் அனுப்புதல்வேண்டும். போட்டிகள் இடம்பெறும் திகதிகள் அந்தந்த போட்டிகளிற்கு விண்ணப்பிக்கும் பாடசாலைகளுக்குப் பின்னர் அறியத்தரப்படும்.

**விண்ணப்ப முடிவுத்திகதி**: 29/09/2023

தொடர்புகளுக்கு
கலாநிதி ரெ. சுவந்தினி (உதவிப் பொதுச் செயலாளர், யாழ்ப்பாண விஞ்ஞானச் சங்கம் )
சிரேஷ்ட விரிவுரையாளர்
விவசாயபீடம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
மின்னஞ்சல்: thejsaorg@gmail.com
தொலைபேசி: 0770725056

# கண்காட்சிப் போட்டி

மாணவர்களின் சிந்தனைத் திறன், புத்தாக்கத்திறன், காட்சித் திறன், எண்ணங்களை வெளிப்படுத்தும் திறன், பொருட்களைக் கையாளும் திறன் போன்ற பல அறிவுத்திறன்களை விருத்திசெய்யும் முகமாக இப்போட்டி ஒழுங்கு செய்யப்படுகிறது.

**போட்டியில் பங்குபற்றத் தகுதியானோர்:** ஒரு பாடசாலையிலிருந்து மூன்று பிரிவுகளிலுமிருந்தும் மாணவர்கள் கண்காட்சிப் போட்டியில் பங்குபற்ற அனுமதிக்கப்படுவர்.

**போட்டி பற்றிய விபரங்கள்:**

- ஒரு பாடசாலையிலிருந்து ஒவ்வொரு பிரிவிலும் எத்தனை காட்சிப் பொருட்களையும் காட்சிப்படுத்தலாம். ஒரு காட்சிப்படுத்தலை **தனியாக** அல்லது ஆகக்கூடியது **மூன்று** மாணவர்கள் கொண்ட குழுவாக மேற்கொள்ளமுடியும்.
- காட்சிப்படுத்தலுக்கான ஆக்கங்கள் விஞ்ஞானம் சார்ந்ததாகவும் புத்தாக்கமாகவும் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினைகளைத் தீர்க்கும் முகமாகவும் **'நிலைபேண்தகு அபிவிருத்தியை நோக்கிய சுற்றுச் சூழல் நேயமிக்க புத்தாக்கத்தைத் தழுவி அடிப்படை ஆராய்ச்சியை ஊக்குவித்தல்'** (Promoting fundamental research by embracing eco-innovation towards sustainable development) என்ற யாழ்ப்பாண விஞ்ஞானச் சங்கத்தின் இவ்வாண்டிற்கான துணைக் கருப்பொருளுக்கு வலுச்சேர்ப்பதாகவும் அமையவேண்டும்.
- சூழலுக்கு ஏற்படும் பாதிப்புக்கள், சக்தி வள மேம்பாடு மற்றும் கழிவுப்பொருள் மீள்சுழற்சி, மீளுருவாக்கம் என்பன கவனத்தில்கொள்ளப்பட வேண்டும். இயலுமானவரை குறைந்த செலவில் உள்ளூர் வளங்களைப் பயன்படுத்தி செய்யப்பட்டிருக்க வேண்டும். இலகுவில் இடம்மாற்றக்கூடியதாக (எடுத்துச் செல்லக்கூடியதாக) இருத்தல் வேண்டும்.
- இப்போட்டியானது மாகாண மட்டத்தில் நடைபெறும்.
- இப்போட்டி தெரிவுசெய்யப்பட்ட பாடசாலைகளில் மட்டுமே இடம்பெறும்.
- பங்குபற்ற விரும்பும் மாணவர்கள் போட்டி நடைபெறும் பாடசாலைக்கு சமூகமளித்து காட்சிப்பொருளை காட்சிப்படுத்தவேண்டும்.
- காட்சிப் பொருட்களுக்குரிய விளக்கங்களை மாணவர்கள் விஞ்ஞான ரீதியில் மதிப்பீட்டாளருக்கு விளங்கப்படுத்தக் கூடியதாக இருக்கவேண்டும்.

**மதிப்பீடு:** புத்தாக்கம் (Innovation), தன்முனைப்பு (Self-motivation), பயனர் நட்பு (User friendly), தொழில்நுட்ப எளிமை (Technical simplicity), தேசிய அல்லது பிராந்திய முக்கியத்துவம் (National or regional importance), மற்றும் நிலைத்தன்மை (Sustainability) போன்ற விடயங்கள் கருத்திற்கொள்ளப்படும். இதில் மதிப்பீட்டாளர்களின் தீர்ப்பே இறுதியானது.

**பரிசில்களும் சான்றிதழ்களும்:** ஒவ்வொரு பிரிவிலும் முதல் மூன்று இடங்களைப் பெறும் மாணவர்களுக்கு சான்றிதழ்களும் பதக்கங்களும் யாழ்ப்பாண விஞ்ஞானச் சங்கத்தின் வருடாந்த அமர்வின் இறுதி நாள் நிகழ்வில் வழங்கப்படுவதுடன் பங்குபற்றும் மாணவர்கள் அனைவருக்கும் இ-சான்றிதழ் வழங்கப்படும்.

**மதிப்பீடு இடம்பெறும் திகதிகள்:** விண்ணப்பிக்கும் பாடசாலைகளுக்கு பின்னர் அறியத்தரப்படும்

**இப்போட்டி சம்பந்தமான சந்தேகங்களுக்கும் மேலதிக விபரங்களுக்கும்:**
திருமதி. பிரதீபா சிவகுமார்
தலைவர், தூய விஞ்ஞானப் பிரிவு (Section A), யாழ்ப்பாண விஞ்ஞானச் சங்கம்
சிரேஸ்ட விரிவுரையாளர், தாவரவியற் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
மின்னஞ்சல்: stheepa@univ.jfn.ac.lk
தொலைபேசி: 0779405877

## சுவரொட்டிக்கான போட்டி

மாணவர்களின் சிந்தனைத் திறன், புத்தாக்கத்திறன், காட்சித் திறன், சித்திர அறிவு போன்ற பல அறிவு/திறன்களை விருத்திசெய்யும் முகமாக இப்போட்டி ஒழுங்கு செய்யப்படுகிறது.

**போட்டியில் பங்குபற்றத் தகுதியானோர்:** ஒரு பாடசாலையிலிருந்து ஒவ்வொரு பிரிவிலும், தனித்தனியாக ஆகக்கூடியது மூன்று (03) மாணவர்கள் இப்போட்டியில் பங்குபற்ற அனுமதிக்கப்படுவர்.

**போட்டி பற்றிய விபரங்கள்:**

- சுவரொட்டிப் போட்டியில் பங்குபற்றும் மாணவர்கள் போட்டி நடைபெறும் இடத்திலேயே தாம் கொண்டுவரும் Bristol board இல் தாம் கொண்டுவந்த பொருட்களைக்கொண்டு வரைய ஆரம்பிக்கவேண்டும்.
- சுவரொட்டிக்கான ஒழுங்குகள் மற்றும் செலவுகள் மாணவர்களினாலேயே செய்யப்படவேண்டும்.
- சுவரொட்டியானது விஞ்ஞானம் சார்ந்த புத்தாக்கமாகவும் மற்றும் விஞ்ஞானச் சங்கத்தின் இவ்வாண்டிற்கான துணைக் கருப்பொருளான **'நிலைபேண்தகு அபிவிருத்தியை நோக்கிய சுற்றுச் சூழல் நேயமிக்க புத்தாக்கத்தைத் தழுவி அடிப்படை ஆராய்ச்சியை ஊக்குவித்தல்'** (Promoting fundamental research by embracing eco-innovation towards sustainable development) என்பதற்கு வலுச்சேர்ப்பதாகவும் அமையவேண்டும்.
- தமது எண்ணக்கருவினை மாணவர்கள் வர்ணங்கள், ஒட்டுத்துண்டுகள் முதலானவற்றினைப் பயன்படுத்தி Bristol board இல் வெளிப்படுத்தலாம்.
- இப்போட்டியானது மாகாண மட்டத்தில் நடைபெறும்.
- இப்போட்டி தெரிவுசெய்யப்பட்ட பாடசாலையகளில் மட்டுமே இடம்பெறும்.
- பங்குபற்ற விரும்பும் மாணவர்கள் போட்டி நடைபெறும் பாடசாலைக்கு சமூகமளித்து குறிக்கப்பட்ட நேரத்தினுள் சுவரொட்டியினைத் தயாரிக்கவேண்டும்.
- உருவாக்கப்பட்ட சுவரொட்டிகள் அனைத்தும் சேகரிக்கப்பட்டு பின்னர் ஒரு தினத்தில் மதிப்பீட்டாளர்களால் மதிப்பீடு செய்யப்பட்டு இறுதித் தீர்வு எட்டப்படும்.

**மதிப்பீடு:** தொனிப்பொருளைக் காட்டுதல், படைப்பாற்றல், கவர்ச்சி, விளக்கம், எளிமை உட்பட பல்வேறு வகையில் துறைசார் வல்லுனர்களால் மதிப்பீடு செய்யப்படும். இதில் மதிப்பீட்டாளர்களின் தீர்ப்பே இறுதியானது.

**பரிசில்களும் சான்றிதழ்களும்:** ஒவ்வொரு பிரிவிலும் முதல் மூன்று இடங்களைப் பெறும் மாணவர்களுக்கு சான்றிதழ்களும் பதக்கங்களும் யாழ்ப்பாண விஞ்ஞானச் சங்கத்தின் வருடாந்த அமர்வின் இறுதி நாள் நிகழ்வில் வழங்கப்படுவதுடன் பங்குபற்றும் மாணவர்கள் அனைவருக்கும் இ-சான்றிதழ் வழங்கப்படும்.

**மதிப்பீடு இடம்பெறும் திகதிகள்:** விண்ணப்பிக்கும் பாடசாலைகளுக்கு பின்னர் அறியத்தரப்படும்.

**இப்போட்டி சம்பந்தமான சந்தேகங்களுக்கும் மேலதிக விபரங்களுக்கும்:**
திருமதி. பிரதீபா சிவகுமார்
தலைவர், தூய விஞ்ஞானப் பிரிவு (Section A), யாழ்ப்பாண விஞ்ஞானச் சங்கம்
சிரேஸ்ட விரிவுரையாளர், தாவரவியற் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
மின்னஞ்சல்: stheepa@univ.jfn.ac.lk
தொலைபேசி: 0779405877

## கட்டுரைப் போட்டி

**போட்டியில் பங்குபற்றத் தகுதியானோர்:** க.பொ.த உயர்தரத்தில் **விஞ்ஞான/தொழிநுட்ப பிரிவில்** கல்விகற்கும் (பிரிவு III) வடமாகாணத்தைச் சேர்ந்த அரச மற்றும் தனியார் பாடசாலை மாணவர்கள் இப்போட்டியில் பங்குபற்ற முடியும்.

**போட்டி நடைமுறை:**

- கட்டுரைகள் பிரயோக விஞ்ஞானம் தொடர்பானதாக/ நவீன தொழிநுட்பங்கள் சார்ந்ததாக அமையவேண்டும்.
- கட்டுரைகள் தமிழில் எழுதப்படவேண்டும்.
- 1000 சொற்களுக்குக் குறையாமலும் 1500 சொற்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். தேவையெனில் இரண்டு/ மூன்று புகைப்படங்கள் (Figures) அல்லது தரவு அட்டவணைகள் (Data tables) கட்டுரையில் சேர்க்கப்படலாம்.
- கட்டுரையின் பகுதிகள் ஏற்கனவே பிரசுரிக்கப்பட்ட ஆவணங்களில் இருந்து பிரதிசெய்யப்பட்டதாக இருக்கக்கூடாது. பிரதி செய்ததாகக் கண்டறியப்படின் குறித்த மாணவர்கள் போட்டியில் இருந்து தகுதியிழப்புச் செய்யப்படுவர்.
- ஒரு மாணவர் ஒரு கட்டுரையை மாத்திரமே சமர்பிக்கமுடியும்.
- கட்டுரைகள் அவ்வவ்வகுப்பாசிரியரினால் உறுதிப்படுத்தப்பட்டு பாடசாலை அதிபரினூடாக கீழ்த்தரப்பட்ட முகவரிக்கு **நவம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கு** முன்னர் கிடைக்க கூடியவாறு தபாலில் அனுப்பிவைக்க வேண்டும்.
- சமர்ப்பிக்கப்படும் கட்டுரைகள் ஒரு நடுவர் குழாமினால் பின்வரும் தேர்ச்சிக் காரணிகளை அடிப்படையாகக்கொண்டு மதிப்பீடு செய்யப்படும்:
  - ✓ தலைப்பிற்கான பொருத்தப்பாடு
  - ✓ படைப்பாற்றல் மற்றும் புதிய சிந்தனைகள்
  - ✓ தெளிவான தொடர்புகொண்ட எழுத்தாற்றல்
  - ✓ விஞ்ஞான ஆதாரங்களுடன் / உதாரணங்களுடன் வாதங்களை முன்வைத்தல்.
  - ✓ மேற்கோள் காட்டப்பட்ட ஆராய்ச்சி மற்றும் ஆதாரங்களின் தரம்.

**பரிசில்களும் சான்றிதழ்களும்:** பதக்கங்களும் யாழ்ப்பாண விஞ்ஞானச் சங்கத்தின் இறுதி நாள் நிகழ்வில் வழங்கப்படுவதுடன் பங்குபற்றும் மாணவர்கள் அனைவருக்கும் இ-சான்றிதழ் வழங்கப்படும். அத்தோடு சிறந்த ஐந்து (05) கட்டுரைகள் தெரிவுசெய்யப்பட்டு அக்கட்டுரைகள் யாழ்ப்பாண விஞ்ஞானச் சங்கத்தினால் வெளியிடப்படும் பிரயோக விஞ்ஞானச் சுடர் சஞ்சிகையில் பிரசுரிக்கப்படும்.

**கட்டுரைகளை தபாலில் அனுப்பவேண்டிய முகவரி:**
திருமதி. அபிராமி கிரிசன்
செயலாளர், பிரயோக விஞ்ஞானப் பிரிவு, (Section B), யாழ்ப்பாண விஞ்ஞானச் சங்கம்
விரிவுரையாளர், விவசாய இரசாயனவியல்துறை, விவசாயபீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
அறிவியல் நகர் கிளிநொச்சி

**இப்போட்டி சம்பந்தமான சந்தேகங்களுக்கும் மேலதிக விபரங்களுக்கும்:**

கலாநிதி ரா. ஈஸ்வரன்,
தலைவர், பிரயோக விஞ்ஞானப் பிரிவு, (Section B), யாழ்ப்பாண விஞ்ஞானச் சங்கம்
சிரேஸ்ட விரிவுரையாளர், விவசாய பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
மின்னஞ்சல்:thejsa.section.b@gmail.com
தொலைபேசி: 077 184 6700

## பாடசாலை தோட்டப்போட்டி

சுற்றுச்சூழலைப் பாதிக்காத பயிர்ச்செய்கை முறைகளை கொண்ட பாடசாலை தோட்டங்களை உருவாக்குவதற்கும் அவற்றினை பராமரிப்பதற்குமான மாணவர்களின் செயன்முறைத் திறன்களை வளர்க்கும் முகமாகவும் விவசாயத்தில் அவர்களின் ஆர்வத்தினை ஊக்குவிக்குமுகமாகவும் இப்போட்டி ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

**போட்டியில் பங்குபற்ற தகுதியான பாடசாலைகள்**: வடமாகாணத்தில் உள்ள அனைத்து வலயங்களைச் சேர்ந்த அரச மற்றும் தனியார் பாடசாலைகளும் இப்போட்டியில் பங்குபற்றலாம். இப்போட்டி பாடசாலைகளுக்கிடையிலான போட்டியாகவே நடாத்தப்படும்.

**தோட்டம் அமைத்தல்:** ஏற்கனவே பாடசாலைத் தோட்டம் காணப்படாதவிடத்து பாடசாலை தோட்டத்திற்கென தனியான ஒருபகுதி ஒதுக்கப்படல் வேண்டும். அடுத்த ஜனவரி-பெப்ரவரி மாதங்களில் பயிர்கள் விளைச்சலை தரக்கூடிய வகையில் தோட்டம் திட்டமிடப்படல் வேண்டும். மழைக்காலம் ஆரம்பிக்க இருப்பதனால் தோட்டப்பகுதியை உயரமான நிலப்பகுதிகளில் அமைக்கலாம்.

**மதிப்பீடு:**
இப்போட்டிக்கு விண்ணப்பிக்கும் பாடசாலைகளில் அமைக்கப்பட்டிருக்கும் தோட்டமானது துறைசார் வல்லுநர்களின் களவிஜயத்தின்போது மதிப்பீடு செய்யப்படும்.

- ✓ தோட்டங்களை மதிப்பீடு செய்யும் போது பின்வரும் விடயங்கள் கருத்தில் கொள்ளப்படும்: தோட்டத்தின் பரப்பளவு (ஆகக்குறைந்தது 10 x 20$m^2$ விஸ்திரணம் இருக்கவேண்டும்)
- ✓ தோட்டத்தில் மாணவர்கள் மற்றும் பொறுப்பான ஆசிரியர்களின் ஈடுபாடு/ஆர்வம்
- ✓ பயிர்களின் பல்வகைத்தன்மை
- ✓ பயிர்களுக்கு பெயர்ப்பலகை (தாவரப்பெயர், குடும்பப்பெயர், பொதுப்பெயர்) இட்டிருத்தல்
- ✓ அறுவடையை அதிகரிக்க பயன்படுத்தப்படும் நவீன நுட்பங்கள்

- ✓ காலநிலை மாற்றத்தால் பயிர்களில் ஏற்படும் பாதிப்புக்களை குறைப்பதற்கான முறைகள் ஒருங்கிணைந்த மற்றும் சேதன விவசாய முறைகளின் பயன்பாடு
- ✓ அறுவடை செய்யப்பட்ட உற்பத்திகளைப் பயன்படுத்தும் முறைகள்
- ✓ தோட்டம் சார்பான தரவுகளை அறிக்கையிடல்

மதிப்பீட்டாளர்களின் தீர்ப்பே இறுதியானது.

**பரிசில்களும் சான்றிதழ்களும்:**
வடமாகாண மட்டத்தில் முதல் மூன்று இடங்களை பெறும் பாடசாலைகளுக்கான வெற்றிக்கேடயங்களும் சான்றிதழ்களும் யாழ்ப்பாண விஞ்ஞானச் சங்கத்தின் வருடாந்த அமர்வின் இறுதி நாள் நிகழ்வில் வழங்கப்படும்.

**மதிப்பீடு இடம்பெறும் காலம்:** களவிஜயத்தின் திகதி அடுத்த வருட ஆரம்பத்தில் போட்டிக்கு விண்ணப்பித்த பாடசாலைகளுக்கு அறிவிக்கப்படும். எமது மதிப்பீட்டுக்குழு போட்டியில் பங்குபற்றும். பாடசாலைகளுக்கு நேரடியாக வருகை தந்து மதிப்பீட்டிகை மேற்கொள்ளும்.

**இப்போட்டி சம்பந்தமான சந்தேகங்களுக்கும் மேலதிக விபரங்களுக்கும்:**
கலாநிதி ரா. ஈஸ்வரன்,
தலைவர், பிரயோக விஞ்ஞானப் பிரிவு, (Section B), யாழ்ப்பாண விஞ்ஞானச் சங்கம்
சிரேஸ்ட விரிவுரையாளர், விவசாய பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
மின்னஞ்சல்: thejsa.section.b@gmail.com
தொலைபேசி: 077 184 6700

## விஞ்ஞான வினாவிடைப்போட்டி

பாடசாலை மாணவர்களிடையே நடாத்தப்படும் இப்போட்டியானது மாணவர்களின் அறிவுத்திறன், விஞ்ஞான ரீதியான சிந்தனைத் திறன், வாசிக்கும் ஆற்றல், தேடிக்கற்கும் திறன் போன்றவற்றை விருத்தி செய்யும் நோக்குடன் நடாத்தப்படுகின்றது.

**போட்டியில் பங்குபற்றத் தகுதியானோர்:** ஒரு பாடசாலையிலிருந்து **பிரிவு III** ஐச் சேர்ந்த **ஐந்து மாணவர்கள்** கொண்ட ஒரு குழு மாத்திரமே இப்போட்டியில் பங்குபற்ற அனுமதிக்கப்படுவார்கள். ஆங்கிலம் மற்றம் தமிழ் மொழிமூலம் போட்டி நடைபெறும்.

**போட்டி பற்றிய விபரங்கள்:**

- இப் போட்டியானது மூன்ற சுற்றுக்களாக நடத்தப்படும்.
- முதலாம் சுற்றில் விஞ்ஞான வினாவிடை எழுத்துப் பரீட்சையானது இணையவழி ஊடாகவோ அல்லது நேரடியாகவோ நடைபெறும்.
- அதிலிருந்து அதிகூடிய புள்ளிகள் பெற்ற 6 பாடசாலைகள் இரண்டாம் சுற்றுக்குத் தெரிவு செய்யப்படுவர்.
- இரண்டாம் சுற்றானது வாய்வழி மூலமான விஞ்ஞான வினாவிடைப் போட்டியாக நடாத்தப்படும்.
- இரண்டாம் சுற்றின் இறுதியில் அதிகூடிய புள்ளியைப் பெற்ற 3 பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டு மூன்றாம் சுற்று இடம்பெறும்.

- மூன்றாம் சுற்றின் இறுதியில் 3 பாடசாலைகள் புள்ளிகளின் அடிப்படையில் முதலாம் இரண்டாம் மூன்றாம் இடத்துக்கு தெரிவுசெய்யப்படும்.

**பரிசில்களும் சான்றிதழ்களும்:** முதல் மூன்று இடங்களைப் பெறும் மாணவர் குழுக்கள் தெரிவுசெய்யப்பட்டு அவர்களுக்கான வெற்றிக் கிண்ணமும் மேலதிகமாக எழுத்து மூலமான விஞ்ஞான விடைப் போட்டியில் அதாவது முதலாவது சுற்றில் அதிகூடிய புள்ளிகளைப் பெறும் முதல் 10 மாணவர்களுக்கு சான்றிதழ்களும் யாழ்ப்பாண விஞ்ஞானச் சங்கத்தின் வருடாந்த அமர்வின் இறுதி நாள் நிகழ்வில் வழங்கப்படும்.

**மதிப்பீடு இடம்பெறும் திகதிகள் மற்றும் இடங்கள்:** விண்ணப்பிக்கும் பாடசாலைகளுக்கு பின்னர் அறியத்தரப்படும்

**இப்போட்டி சம்பந்தமான சந்தேகங்களுக்கும் மேலதிக விபரங்களுக்கும்:**

வைத்தியக் கலாநிதி ந. பரமேஸ்வரன்
தலைவர், மருத்துவ விஞ்ஞானப் பிரிவு (Section C), யாழ்ப்பாண விஞ்ஞானச் சங்கம்
மாகாண சுகாதார பணிப்பாளர் திணைக்களம், யாழ்ப்பாணம்
மின்னஞ்சல்: nagarajahparameswaran@gmail.com
தொலைபேசி: 077 296 8879

## புனை கதைப்போட்டி

**போட்டியில் பங்குபற்றத் தகுதியானோர்:** ஒரு பாடசாலையிலிருந்து பிரிவு II (தரம் 9-11) சேர்ந்த 02 மாணவர்கள் மட்டும் பங்குபற்றலாம்.

**போட்டி நடைமுறை:**

- இப்போட்டிக்கு மாணவர்கள் தமிழ் அல்லது ஆங்கில மொழி மூலம் பங்குபற்ற முடியும்.
- போட்டியாளர் போட்டி நடைபெறும் இடத்திற்கு நேரடியாகச் சமூகந்தரவேண்டும்.
- புனைகதையின் கருப்பொருள் போட்டி நடைபெறும் நினத்தில் தரப்படும்.
- போட்டியாளரால் எழுதப்படும் கதைக்கு பொருத்தமான தலைப்பு தீர்மானிக்கப்படவேண்டும்.
- புனைகதை 300-500 சொற்களில் ஒரு மணி நேரத்தில் எழுதப்படவேண்டும்.

மதிப்பீட்டின் போது பின்வருவன கருத்தில் கொள்ளப்படும்:

- ✓ கருப்பொருளுக்கு பொருத்தமான கதை,
- ✓ கதைக்கு பொருத்தமான தலைப்பு,
- ✓ படைப்பாற்றல்,
- ✓ பொருத்தமான நிலையான சொற்களஞ்சியப் பயன்பாடு,
- ✓ பொருத்தமான குறியீடுகள்
- ✓ முன்னரே வெளியான கதைகளைப் பிரதி செய்தால் போட்டியில் இருந்து நீக்கப்படுவர்.

இப்போட்டியானது குறிப்பிட்ட பாடசாலைகளில் நடைபெறும். பங்கு பற்ற விரும்பும் மாணவர்கள் போட்டி நடைபெறும் பாடசாலைக்கு சமூகமளித்து குறிப்பிட்ட நேரத்தினுள் தரப்பட்ட கருப்பொருளில் புனைக்கதை எழுதவேண்டும். மதிப்பீடுகள் மாகாண மட்டத்தில் நடைபெறும்.

**பரிசில்களும் சான்றிதழ்களும்:** இரு மொழிமூலமான ஆக்கங்களும் தனித்தனியாக மதிப்பீடு செய்யப்பட்டு முதல் மூன்ற இடங்களைப் பெறும் மாணவர்களுக்கு பதக்கங்களும் சான்றிதழ்களும் யாழ்ப்பாண விஞ்ஞானச் சங்கத்தின் வருடாந்த அமர்வின் இறுதி நாள் நிகழ்வில் வழங்கப்படும்.

**மதிப்பீடு இடம்பெறும் திகதிகள் - இடங்கள்:** விண்ணப்பிக்கும் பாடசாலைகளுக்கு பின்னர் அறியத்தரப்படும்.

**இப்போட்டி சம்பந்தமான சந்தேகங்களுக்கும் மேலதிக விபரங்களுக்கும்:**

வைத்தியக் கலாநிதி ந. பரமேஸ்வரன்
தலைவர், மருத்துவ விஞ்ஞானப் பிரிவு (Section C), யாழ்ப்பாண விஞ்ஞானச் சங்கம்
மாகாண சுகாதார பணிப்பாளர் திணைக்களம், யாழ்ப்பாணம்
மின்னஞ்சல்: nagarajahparameswaran@gmail.com
தொலைபேசி: 077 296 8879

## பேச்சுப் போட்டி

**போட்டியில் பங்குபற்றத் தகுதியானோர்**: ஒரு பாடசாலையில் இருந்து பிரிவு I, II, III இனைச் சேர்ந்த ஆகக்கூடியது இரண்டு (02) மாணவர்கள் மட்டுமே இப்போட்டியில் பங்கு கொள்ள அனுமதிக்கப்படுவார்கள்.

**போட்டி நடைமுறை:**

- இப்போட்டிகள் இரண்டு சுற்றுகளாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பிரதான வளாகத்தில் நடைபெறும்.
- இப்போட்டியின் பிரதான கருப்பொருளாக '**நிலைபேறான அபிவிருத்திக்கு சுற்றுச்சூழல் பாதுகாப்பு தொடர்பான சமூக உணர்வை வளர்த்தல்**' அமையும்.
- முதலாம் சுற்றிற்கு இக்கருப்பொருள் சார்ந்து தலைப்புக்கள் வழங்கப்படும்
- மாணவர்கள் வழங்கப்படும் தலைப்பிற்கு தமது உரையினைத் தயார் செய்தல் வேண்டும்
- போட்டிக்கான நிமிடங்கள்: 8-10 நிமிடங்கள்
- முதலாம் சுற்றில் இருந்து 10 மாணவர்கள் இரண்டாம் சுற்றிற்கு தெரிவு செய்யப்படுவார்கள்
- இரண்டாம் சுற்றிற்கான தலைப்பு போட்டி நடைபெறும் தினம் அறியத்தரப்படும்
- மாணவர்கள் வழங்கப்படும் தலைப்பிற்கு தமது உரையினைத் தயார் செய்தல் வேண்டும்

**மதிப்பீடு:**
மதிப்பீட்டின்போது பின்வரும் விடயங்கள் கவனத்திற் கொள்ளப்படும்:

- பேச்சினுடைய உள்ளடக்கம்: பேசப்படும் விடயத்தின் உண்மைத் தன்மை, நம்பிக்கைத் தன்மை, பேச்சிற்கான சரியான அறிமுகம், வெற்றிகரமானதும், பொருத்தமானதுமான முடிவினை முன்வைக்கக்கூடிய கருப்பொருளின் தர்க்கரீதியான வளர்ச்சி, எண்கணிய அடிப்படையிலான சரியான தரவுகள், பேச்சின் புன்னகை, அழகான அர்த்தமுள்ள சொற்களினை தெரிவுசெய்தல், அவற்றினை சரியான விதத்தில் விபரணம் செய்தல்
- பேச்சினை வெளிப்படுத்தும் முறையும் உடலசைவு மொழியும் (Body language): பேச்சாளரின் பேசும் சத்தத்தினுடைய தன்மை, ஒலியின் ஏற்ற இறக்கம், தயக்கம் எதுவும் இன்றியதொடர்ச்சியா பேச்சு, உடலசைவுகள், தன்னம்பிக்கை, உறுதி
- பேச்சின் முழுமையான வினைத்திறன் (Overall Effectiveness)
- பின்வரும் தவறுகளுக்காகப் புள்ளிகள் கழிக்கப்படும்:
    - ✓ உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்ட விடயங்களில் இருந்து பேச்சுவிடயம் வேறுபடின் புள்ளிகள் குறைக்கப்படும்.
    - ✓ குறித்த 5 நிமிடங்களுக்கு குறைவாகவோ அல்லது கூடுதலாகவோ உள்ள ஒவ்வொரு 15 செக்கனுக்கும் புள்ளிகள் குறைக்கப்படும்
    - ✓ பேச்சை சரியான வகையில் முடிக்கத் தவறுதல்

**பரிசில்களும் சான்றிதழ்களும்:** முதல் மூன்று இடங்களைப் பெறும் மாணவர்களுக்கு பதக்கங்களும் சான்றிதழ்களும் இரண்டாம் சுற்றுக்குத் தெரிவுசெய்யப்படும் 10 மாணவர்களுக்கு சான்றிதழ்களும் யாழ்ப்பாண விஞ்ஞானச் சங்கத்தின் வருடாந்த அமர்வின் இறுதி நாள் நிகழ்வில் வழங்கப்படும்.

**மதிப்பீடு இடம்பெறும் திகதிகள்:** விண்ணப்பிக்கும் பாடசாலைகளுக்கு பின்னர் அறியத்தரப்படும்.

**இப்போட்டி சம்பந்தமான சந்தேகங்களுக்கும் மேலதிக விபரங்களுக்கும்:**

திரு தி. திலீபன், தலைவர், சமுமூக விஞ்ஞானப் பிரிவு (Section D), யாழ்ப்பாண விஞ்ஞானச் சங்கம்
விரிவுரையாளர், கலைப் பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
மின்னஞ்சல்: thileepant@univ.jfn.ac.lk
தொலைபேசி: 077 749 2866